இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE No. 6,386, JUNE 17, 1910.

# TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

[Proclamation relating to amended Municipal By-laws, Kandy.]

பெரிய பிரித்தானும் அயர்லாந்துமாகிய ஐக்கிய இராட்சியத்துக்கும் கடல்களுக்கு அப்புறத்துள்ள பிரிட்டிஷ் அதிகாரஞ்செல்லும் நாடுகளுக்கும் இராசாவும் சமயபரிபாலகருமாகிய மகத்துவநாயக ஐந்தாம் ஜோர்ஜ் அவர்களின் நாமத்தினாலே:

மகா மகிமைபொருந்திய சென்ற் மைக்கேல் அன் சென்ற் ஜோர்ஜ் வரிசையின் கயிற் பட்டவர்த்தனரும் மகத்துவ ராஜாவின் வடிகோர் படைத்தலைவரும் இலங்கைத்தீவுக்கும் அதைச்சார்ந்த நாடுகளுக்கும் உத்தம தேசாதிபதியும் சேனாதிபதியுமாகிய ஹென்ரி மக்கலம் அவர்களால்

## விளம்பரம்.

ஹென்ரி மக்கலம்,

1906 ம் ஆண்டு மார்கழி 18 ந் திகதி விளம்பரப்படுத்தப்பட்ட துணைப்பிரமாணங்களுள் XI. ம் XIII. ம் அதிகாரங்களிலடங்கிய சில துணைப்பிரமாணங்கள் 1901 ம் வருஷத்து 8 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தினால் திருத்திய 1887 ம் ஆண்டின் (7) ம் இலக்க கண்டி முனிசிப்பல் சட்டத்து 122 ம் பிரிவின் கொள்கைப்படி பின்வரு மட்டவணையிலடங்கிய துணைப்பிரமாணங்களை இதன் கீழ்ச்சேர்த்து அத்துணைப்பிரமாணங்களை முற்சொன்ன சட்டத்தின் 124 ம் பிரிவின்படி அதிகார சபையின் ஆலோசனைப்படி அதிஉத்தம தேசாதிபதியால் பெலப்படுத்தப்பட்டு, ஒன்றின்பின் ஒன்றாய் இருமுறை அதாவது 1910 ம் ஆண்டு மாசி 18 ம் 25 ந் திகதிகளில் "கெவுண்மேன்றுக் கசற்றுப்" பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு சட்டநிரூபண சபையின்முன் கொண்டுவரப்பட்டதாலும்:

மேற்படி துணைப்பிரமாணங்கள் அந்தப் பிரகாரஞ் சொல்லப்பட்ட சட்டநிரூபண சங்கத்துக்கு முன்னுகக் கொண்டுவரப்பட்டு நாற்பது நாளிருந்தும் சொல்லப்பட்ட சபையால் திருத்த அல்லது அழிக்கப்படாததாலும்:

ஆகையால் இலங்கைத் தேசாதிபதியாகிய நாம் முதற்சொன்ன சட்டத்தின் 124 ம் பிரிவின் 2 ம் கீழ்ப்பிரிவால் நம்மிடத்து பொருந்திய தத்துவத்தைச் செலுத்தி இத்தோடிணைத்திருக்கும் அட்டவணையிற் காட்டிய திருத்தப்பட்ட துணைப் பிரமாணத்தை இப்போது பிரசித்தப்படுத்துகின்றோம் என்றும் இந்தத் தேதி முதலாகஅது வழங்க வேண்டுமென்று வெளிப்படுத்துகிறோம் என்று நீவிர் அறிந்துகொள்வீர்களாக.

எங்கள் ஆண்டவரின் வருஷம் ஆயிரத்துத் தொளாயிரத்துப் பத்தாம் ஆண்டின் ஆனி ஆறுந் தேதியாகிய இத்தினத்தில் இலங்கைத்தீவு அரமனையில் கொடுக்கப்பட்டது.

தேசாதிபதி உத்தமனுர் கட்டளைப்படி,

எச். எல். கிளவ்வோட்,
எக்றிங் இராசாங்க லிகிதர்.

இராசாவை கடவுள் காப்பாராக.

---

கட்டிய அட்டவணை.

திருத்தங்களின் டாபு.

### XI. ம் அதிகாரம்.

129 ம் துணைப்பிரமாணம்: வெளிப்படுத்திய துணைப்பிரமாணத்துக்குப் பதிலாக பின்வரும் துணைப்பிரமாணத்தை வைத்துக்கொள்க.

129. மாட்டுக்கொட்டில் முதலானவைகளைப் பராமரித்தல்.—ஒவ்வொரு குதிரைலாயம் மாட்டுக்குடில் மாடு தங்கும் இடத்தையுடைய சொந்தக்காரன் அல்லது குத்தகைக்காரன் செங்கல் காட்டுக்கல் கொன்கிறீற் சீமெந்து நிலத்தில் போட்டுக்கட்டி ஓடுபோட்டு விடவேண்டியது, மூத்திரசலம் அழுக்குத்தண்ணீரைச் சபாநாயகரால் கட்டளையிடப்பட்டபடி கொண்டுபோவதற்கு மூடியுள்ள ஒரு வக்கைக் கட்டவேணும். ஏதொரு நாற்றம் உண்டாகாதபடி ஆங்குள்ள சப்புச்சவர் முழுவதும் சொந்தக்காரன் அல்லது குத்தகைக்காரனுடைய செலவோடு கொண்டுபோகப்படவேணும். அவ்விதலாயம் மாட்டுக்கொட்டில் தங்குமிடம் அல்லது கால நாள்வீதம் கழுவவேண்டும், எப்போதுஞ் சுத்தமாய் வைத்திருக்கவேணும், மூன்று மாசத்துக் கொருமுறையாவது வெள்ளையடிக்கவேணும்.

129 ம் துணைப்பிரமாணத்துக்குப் பின்வரும் துணைப்பிரமாணத்தைச் சேர்த்துக்கொள்க :—

129A. குதிரைலாயம், மாட்டுக்குடில், மிருகவைத்தியசாலை, வண்டித்தொழுவம் அல்லது பத்து அல்லது அதற்கு மேற்பட்ட செம்மறியாடு வெள்ளாடுகளை அல்லது ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட மாடுகளை விடக்கூடிய

மாட்டுத்தொழுவத்தை உடைய சொந்தக்காரன் அல்லது குடியிருப்பவன் ஒரு நாளைக் கொருதரமாவது எல்லாச் சாணிகளையும் பயனையும் அழுக்கையும் மூத்திரத்தையும் வேறு ஆகாத அல்லது நஞ்சுள்ள பொருள்களையும் அந்த இடங்களிலிருந்து அகற்றிச் சபாநாயகரால் காலத்துக்குக்காலம் குறிக்கப்படுமிடங்களிற் சேகரித்து வைத்தல்வேண்டும்.

அப்படியுள்ள இடங்களில் உண்டாகுஞ் சாணிகளைப் பயனை அழுக்கை மூத்திரத்தை அல்லது ஆகாத அல்லது நஞ்சுள்ளபொருளைச் சபாநாயகரைக் கேட்டு அவரால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் செலவுகளைக் கொடுத்துச் சங்கத்தாரால் அகற்றுவித்துக்கொள்ளலாம்.

### XIII. ம் அதிகாரம்.

துணைப்பிரமாணம் 207 க்கும் பதிலாக :—

207. குடியிருப்போர் கஞ்சல் குப்பைகளை தக்க ஏதனங்களில் வைத்தல் வேண்டும்.—யாராகிலு மொருவர் சங்கத்தின் அழுக்குவாரிகளிலுள்ள தனது நிலத்திலிருக்கும் (வியாபாரத்தொழில் நடக்குமிடத்திலிருக்கும் கஞ்சல் அல்லாத) சாம்பலைக் குப்பைகூளங்களை அல்லது வேறு கஞ்சல்களை அகற்றுவதற்கு விரும்புவாரேயாகில், அவைகளைச் சபாநாயகர் காலத்துக்குக்காலம் அறிவித்தல்கொடுத்து குறிக்கப்படும் மணித்தியாலங்களில், அவரால் எழுத்தில் அங்கீகரிக்கப்பட்ட பருமையுந் தோற்றமுமுள்ள மூடப்பட்ட வாளிகளில் பெட்டிகளில் அல்லது வேறு ஏதனங்களில் போட்டுத் தெருவருகில் பதித்திருக்கும் வெட்டுக்கல்லுகள்மேல் அல்லது அடிப்பாதைக்கருகில் கொண்டுபோய் வைத்திருக்கவேண்டும். சொல்லப்பட்ட வாளிகளைப் பெட்டிகளை அல்லது ஏதனங்களை அழுக்குவாரிகள் வெறுமையாக்கிவிட்ட அரைமணித்தியாலத்துக்குள் எடுத்தப்போடவேண்டும். யாதாமொருவரும் மேலேசொல்லிய மூடப்பட்ட வாளிகளில் பெட்டிகளில் அல்லது அவ்வித ஏதனங்களிலன்றிக் குறிக்கப்பட்ட மணித்தியாலங்கள் தவறியும் தெருவிலே சாம்பலைக் குப்பைகூளங்களை அல்லது வேறு கஞ்சல்களைப் போடவும் வைக்கவுங் கூடாது.

பின்வரும் துணைப்பிரமாணத்தை 207 க்கும்பின் சேர்த்துக்கொள்க :—

207A. வியாபாரத் தொழில் நடக்குமிடத்திலுள்ள கஞ்சல் அகற்றுதல்.—வியாபாரத் தொழில் நடக்குமிடங்களில் உள்ள கஞ்சல்களை அகற்றவேண்டுமானால் அதுபற்றிச் சபாநாயகரிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு அவர்களினால் காலத்துக்குக்காலம் நியமிக்கப்படும் செலவு விகிதப்படி சங்கத்தாரைக்கொண்டு அகற்றுவிக்கலாம்.

209 ம் துணைப்பிரமாணத்துக்குச் சேர்த்துக்கொள்ள :—

209A. தேக அப்பியாசத்துக்குரிய இடங்களில் ஒருவரும் பூமரங்கள் முதலியவைகளைப் பிடுங்கப்படாது.—சங்கத்துக்குடைய அல்லது அவர்கள் பாரத்திலிருக்கும் பிரசித்த அல்லது தேக அப்பியாச இடங்களைப் பாவிப்பவர் அங்கே யாதொரு அசங்கிதம் செய்யப்படாது. சபாநாயகருடைய உத்தரவில்லாமல் அங்குள்ள பூமரங்களையாவது அல்லது பூவையாவது பிடுங்கப்படாது. அங்குள்ள மரங்களுக்குஞ் செடிகளுக்கும் யாதாமொரு பழுதுஞ்செய்யவும்படாது.

209B. மிருகங்களைக் கட்டி நிற்பாட்டல் விலக்கப்பட்டிருக்கிறது.—சபாநாயகருடைய உத்தரவு எழுத்தில் வேண்டியே அல்லாமல் யாதொருவரும் நகர விசாரணைக்குள்ளிருக்கும் பிரசித்த இடங்களில் அல்லது நகரசங்கத்துக்குடைய அல்லது சங்கத்தவரின் பாரத்திலிருக்கும் நிலமல்லாத இடத்தில் மாடுகளைக் கட்டவாவது கழுதைகளைக் கொட்டி நிற்பாட்டவாவது அல்லது அவ்விடங்களிற் பதிவாகவிருக்கவாவது கூடாது.

213 ம் துணைப்பிரமாணத்துக்குப்பின் சேர்த்துக்கொள்ள :—

213A. சொந்தக்காரன் அல்லது குடியிருப்பவன், வேலிகளைப் பழுதுபார்த்துக் குறிக்கப்பட்ட மட்டத்துக்குச் செய்தல் வேண்டும்.—எந்த நிலமுடையவனையும் அந்நிலத்தை கல்லைச் சுவர்களால் அல்லது நல்ல வேலிகளால் (அவ்வெல்லை வேலிகள் முன்னில்லாவிடில்) குழும்படியும் (அவ்வெல்லை வேலிகளுண்டாயின்) சொந்தக்காரனை அல்லது வத்தைக்காரனை அல்லது குடியிருப்பவனை அவைகளைச் சரியாய்ப் பழுபார்த்து வைக்கவும் சபாநாயகர் காலத்துக்குக்காலம் குறிக்கும் மணித்தாய தெருவின் நிலமட்டத்திலிருந்துள்ள உயரத்துக்கு மிஞ்சாது, வேலிகளை வெட்டி மட்டம்பார்த்து வைக்கவும், கல்லைச் சுவர்களைத் தாழ்த்தவும் அல்லது அவருடைய எண்ணத்தில் தெருவை மறிக்கும் அல்லது அபாயத்துக்கேதுவாகத் தெருமேல் நீண்டு படர்ந்துங்கும் மரங்களை வெட்டிக் குறைத்து மட்டஞ்செய்யவும் சபாநாயகர் கேட்கலாம். இந்தத் துணைப்பிரமாணத்துள்ள கோட்பாடுகளை நிறைவேற்றும்படி சொந்தக்காரன், வத்தைக்காரன் அல்லது குடியிருப்பவன் எழுத்துமூலமாய்க் கேட்கப்படலாம், அல்லது அவ்வெழுத்தைத் தபால்மார்க்கமாய் அனுப்பலாம். அவ்விதங் கேட்கப்படுங் காரியங்களைச் சொந்தக்காரன், வத்தைக்காரன், அல்லது குடியிருப்பவனுமுள்ளவன் கொத்திசிற் சொல்லிய கால எல்லைக்குள்ளும் அல்லது சபாநாயகரால் கொடுக்கப்படும் தவணைக்குள்ளும் முடித்தல் வேண்டும்.

221A ம் துணைப்பிரமாணத்துக்குப் பின்சேர்த்துக்கொள்ள :—

221B. பிரசித்த இடத்தில அல்லது தேகஅப்பியாசத்துக்குரிய இடங்களிற் சங்கத்தாரால அமைக்கப்படும் ஆசனங்களில் யாராவது படுத்துக்கொள்ளவும் காலைப் போடவுங் கூடாது.

221C. பிரசித்த இடங்களிலுள்ள ஆசனங்களைத் தொத்துவியாதிக்காரர் பாவிக்கப்படாது.—அருவருப்பான அல்லது தொத்துவியாதிகளாற் பிடிக்கப்பட்ட எவரும் பிரசித்த இடங்களில் அல்லது தேகஅப்பியாசத்துக்குரிய இடங்களில் சங்கத்தாரால் அமைக்கப்பட்ட ஆசனங்களில் உட்காரவாவது பாவிக்கவாவது கூடாது.

221D. அழுக்கு அல்லது குப்பையைத் தடாகத்துக்குள் எறியப்படாது.—கண்டித் தடாகத்துக்குள் அல்லது அத்தடாகத்துக்குள் விழும் நீர் ஓட்டங்களிலாவது எவரும் எவ்வித அழுக்காவது குப்பையையாவது அல்லது நஞ்சுள்ள அல்லது தீங்குள்ள எந்தப் பொருளையாவது எறியவும் போடுவிக்கவும் கூடாது.

221E. தடாகத்திலிருந்து மணல் முதலியவைகளை அகற்றக்கூடாது.—கண்டித் தடாகத்திலிருந்து சபாநாயகருடைய உத்தரவில்லாமல் எவரும் மணலை வாரவும் அல்லது குளக்கட்டுக்கு மோசத்தை வருவிக்கும் எச்செயலையும் செய்யக்கூடாது.

220A. பாய்கள் முதலியவைகள் தூக்கப்படாது. தெருவிலாவது பக்கங்களிலாவது எவரும் பாய்களையாவது துணிகளையாவது வேறு எதையாவது தூக்கவும் பரப்பவும் கூடாது.

---

[Proclamation relating to amended Municipal By-laws, Kandy.]

பெரிய பிரித்தானும் அயர்லாந்துமாகிய ஐக்கிய இராட்சியத்துக்கும் கடல்களுக்கு அப்புறத்துள்ள பிரிட்டிஷ் அதிகாரஞ்செல்லும் நாடுகளுக்கும் இராசாவும் சமயபரிபாலகருமாகிய மகத்துவமான ஐந்தாம் ஜோர்ஜ் அவர்களின் நாமத்திலே :

மகா மகிமைபொருந்திய சென்ற் மைக்கேல் அன் சென்ற் ஜோர்ஜ் வரிசையின் கமிற் பட்டயர்த்தனரும் மகத்துவ ராஜாவின் படிசோல் பண்டைத்துரைவரும் இலங்கைத்தீவுக்கும் அதைச்சார்ந்த நாடுகளுக்கும் உத்தம தேசாதிபதியும் சேனாதிபதியுமாகிய ஹென்றி மக்கல்லம் அவர்களால்

விளம்பரம்.

ஹென்றி மக்கல்லம்,

1906 ம் ஆண்டு மார்கழியீ 18 ந் திகதி விளம்பரப்படுத்தப்பட்ட துணைப்பிரமாணங்களுள் XX. ம் அதிகாரத்திலடங்கிய துணைப்பிரமாணங்கள் 1901 ம் வருஷத்து 8 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தினால் திருத்திய 1887 ம் ஆண்டின் (7) ம் இலக்க கண்டி முனிசிப்பல் சட்டத்து 122 ம் பிரிவின் கொள்கைப்படி பின்வரு மட்டளையிலடங்கிய துணைப்பிர

மாணத்தை இதன் கீழ்ச்சேர்த்து அத்துணைப்பிரமாணங்கள் முற்சொன்ன சட்டத்தின் 124 ம் பிரிவின்படி அதிகார சபையின் ஆலோசனைப்படி அதியுத்தம தேசாதிபதியால் பலப்படுத்தப்பட்டு, ஒன்றின்பின் ஒன்றாய் இருமுறை அதாவது 1910 ம் ஆண்டு மாசி மீ 18 ம் 25 ம் திகதிகளில் "கவுண்மேண்டுக் கசற்றுப்" பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு சட்டநிரூபண சபையின்முன் கொண்டுவரப்பட்டதாலும்:

மேற்படி துணைப்பிரமாணங்கள் அந்தப்பிரகாரஞ் சொல்லப்பட்ட சட்டநிரூபண சங்கத்துக்கு முன்னுக் கொண்டுவரப்பட்டு நாற்பது நாளிருந்தும் சொல்லப்பட்ட சபையாற் திருத்த அல்லது அழிக்கப்படாததாலும்;

ஆனபடியால் இலங்கைத் தேசாதிபதியாகிய நாம் முதற்சொன்ன சட்டத்தின் 124 ம் பிரிவின் 2 ம் கீழ்ப்பிரிவால் நம்மீது பொறுத்திய தத்துவத்தைச் செலுத்தி இத்தோடிணைத்திருக்கும் அட்டவணையிற் காட்டிய திருத்தப்பட்ட துணைப்பிரமாணத்தை இப்போது பிரசித்தப்படுத்துகின்றோம் என்றும், இந்தத் தேதி முதலாக அது வழங்கவேண்டுமென்று வெளிப்படுத்துகிறோம் என்று நீவிர் அறிந்துகொள்வீர்களாக.

எங்கள் ஆண்டவரின் வருஷம் ஆயிரத்துத் தொளாயிரத்து பத்தாம் ஆண்டின் ஜூனீ ஆறாந் தேதியாகிய இத்தினத்தில் இலங்கைத்தீவு நுவரெலியாவிற் கொடுக்கப்பட்டது.

தேசாதிபதி உத்தமனுர் கட்டளைப்படி,

எச். எல். குருவோட்,
எக்திங் இராசாங்க லிகிதர்.

இராசாவைக் கடவுள் காப்பாராக.

---

அட்டவணை.

XX. ம் அதிகாரம்.

கோதுமை அப்பஞ் சுடுமிடங்களும் சோத்துக்கடைகளும்.

297. (1) *உத்தரவுச்சீட்டு.*—நகரசங்கத்தலைவரிடம் வருஷாந்தம் உத்தரவுச்சீட்டுப்பெறுமல் கோதுமை அப்பஞ் சுடுவிற்குமிடம் யாதொன்றும் வைத்திருக்கப்படாது.

(2) *தண்ணீர்குளாய் வைத்தல்.*—வருஷாந்த உத்தரவுச்சீட்டுப் பெற்றுக்கொள்ள விண்ணப்பஞ்செய்கிறவர் அவ்விதஞ்செய்யுமுன் அவர் அப்பஞ்சுட எண்ணுமிடத்துக்குப் பெரியகுளாயிலிருந்து போதியளவு தண்ணீர் வரக்கூடிய தண்ணீர்க்குளாய்கள் அமைப்பித்துக்கொள்ளவேண்டும். அவ்விடத்தைக் கழுவித் துப்பரவுபண்ணப் போதியளவு தண்ணீர் வரத்தக்க நல்ல நிலபரத்திலும், துப்பரவாகவும், குளாய்களையும் அதைச்சேர்ந்த சகல கருவிகளையும் வைத்திருக்கவேண்டும்.

298. (1) *சுவர்களுக்குச் சாந்தும் நிலத்துக்குச் சிமெந்தும் பூசப்பட்டு இருக்கவேண்டும்.*—கோதுமைஅப்பஞ் சுடுமிடம் நல்ல வெளிச்சமுங் காற்றுமுள்ளதாயிருத்தல்வேண்டும். அவைகளின் சுவர்களை வச்சிரத்துலைமாகவும் சாந்து பூசப்பட்டு சுண்ணும்பால் வெள்ளையடிக்கப்பட்டும், நிலஞ் சிமெந்து பூசப்பட்டு மிருக்கவேண்டும். போதியளவு சாளரங்களும் கட்டப்பட்டு மிருக்கவும் வேண்டும். மாப்பிசையும் மேசைக்கு உயர சீவிங் கூடாரம் போடப்பட்டிருக்கவேண்டும்.

(2) *கக்கூஸ்முதலிய குழிகளிலிருந்து 30 அடிக்குள் கோதுமை அப்பஞ்சுடுமிட மிருக்கப்படாது.*—கக்கூஸ் முதலிய குழிகளிலிருந்து 30 அடி தூரத்துக்குள் யாதொரு கோதுமைஅப்பஞ் சுடப்படுமிடம் அல்லது அதின் பாக மிருக்கப்படாது, அதுவுமல்லாமல் கெட்ட காற்றுங் வீசும்பொழுது துன்நாற்றம் பிடிக்கக்கூடிய இடத்திலு மிருக்கப்படாது.

299. *கோதுமைஅப்பஞ் சுடுமிடத்தில் வேறுயாதொரு தொழிலுஞ் செய்யப்படாது.*—கோதுமை அப்பஞ்சுடுகிற விடத்தில வேறு யாதொரு தொழிலுஞ் செய்யாதிருக்கவேண்டும்; மேலுங் உள்ளே குடியிருக்கும் வீட்டுடன் சம்மந்தப்பட்டிருக்கவும்படாது.

300. *தட்டுமுட்டுச் சாமான்கள் துப்பரவாயிருத்தல் வேண்டும்.*—கோதுமைஅப்பஞ் சுடுமிடத்தில் உள்ள கருவிகள் தட்டுமுட்டுச் சாமான்கள் எல்லாம் சுத்தமாய் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

301. *பாவிக்கப்படும் பதார்த்தங்கள்.*—துப்பரவாயிருத்தல்வேண்டும். கோதுமையப்பஞ் சுடுவதற்காகப் பாவிக்கப்படும் மா தண்ணீர் மற்றும் பதார்த்தங்கள் எல்லாம் நல்லதும் சுகத்துக்கேற்றதாயு மிருத்தல்வேண்டும். மேலும் மாப்போட்டுவைக்கிறதற்காக வேறு அறை ஒன்று இருத்தல்வேண்டும். அப்பஞ் சுடுகிற இடத்தில் மா முதலியவைகளை நிலத்தில் வைக்கப்படாது.

302. (1) *குப்பைமுதலியவை யகற்றல்.*—அவ்விடங்களிலுள்ள குப்பை அழுக்கு முதலியவையெல்லாம் பெருக்கித் தள்ளப்பட்டு அழுக்கு நீர்பாயும் வாய்க்கால்களெல்லாம் நல்லாய்க் கழுவப்படல் வேண்டும். மேலும் அவ்வீடு எப்பொழுதும் சுத்தமாயிருத்தல்வேண்டும்.

(2) *தொற்றுநோயுள்ளவர்கள் வேலைசெய்யப்படாது.*—அப்பஞ் சுடுமிடத்தில் தொற்று நோயாளராவது அல்லது அருவருப்புள்ள நோயாளராவது, அப்படி நோயாளரைச் சிறிது நேரத்துக்கு முன்பதாகப் பார்த்தவராவது குழித்துச் சரீரங் கழுவாதவர்களாவது அசுத்தர்களாவது வேலைசெய்யாதிருத்தல்வேண்டும்.

(3) *மாப்பிசைபவர்கள் முன்தாங்கிகள் அணிதல்.*—மாப்பிசைபவர்கள் எல்லாரும் பெரிய துப்பரவான முன்தாங்கிகள் அணிந்திருத்தல் வேண்டும்.

(4) *அப்பம் முதலியவைகள் இலையான் தூசிகளிலிருந்து விலக்கிவைத்தல்.*—இலையான் தூசி முதலியவைகளிலிருந்து இனிப்புப் பலகாரங்கள், அப்பம் மா முதலியவைகளை விலக்கிவைக்க வேண்டிய நியாயமான எல்லா எச்சரிக்கைகளுஞ் செய்தல்வேண்டும்.

(5) *கோதுமையப்பஞ் சுடுமிடத்தின் நிருபண.*—கோதுமையப்பஞ் சுடுமிடத்தைச்சேர்ந்த எந்தக் கட்டடமாவது அல்லது கட்டடத்தின் பாகமாவது மற்றெந்த விஷயத்திற்கும் பாவிக்கப்பட்டாலும், அந்தக் கட்டடம் கோதுமையப்பஞ் சுட்டுவிற்கப்படு மிடத்துடன் சம்பந்தப்பட்டிருக்கும்.

(6) *கோதுமை யப்பம் ஏற்றிக்கொண்டுபோகுதல்.*—கோதுமையப்பத்தை மூடின கூடையி லல்லது மூடின கூடை தகரப்பெட்டி அல்லது மற்றெந்தப் பாத்திரத்திலே கொண்டுபோகிறதே தவிர, ஒருவரும் ஒரு இடத்திலிருந்து மற்றெந்த இடங்களுக்குங் கொண்டுபோதல் கூடாது. அப்படிக்கொண்டுபோகும் கூடை, கூடை, தகரப்பெட்டி அல்லது மற்றப் பாத்திரங்கள் எப்பொழுதுஞ் சுத்தமாய் வைத்திருத்தல் வேண்டும். முன்னேற்றிக்கொண்டுபோன அல்லது அழுக்காயிருக்கிற அல்லது சுத்திகரமில்லாத அப்பத்தை மறுபடியும் கொடுத்தல் கூடாது.

303. (1) *சாப்பாட்டு வீடுகள்.*—இந்தக் கட்டளைச்சட்டங்கள் வெளியானபின் எவருஞ் சாப்பாட்டுச்சாலை வைக்க அல்லது மேற்பார்க்க வேண்டுமெனனுல் அது அவற்குஞ்செய்ய 7 நாளுக்கு முன்பதாக நகரசங்கத்தலைவருக்கு அறிவித்தல் வேண்டும். அப்படி இந்தக் கட்டளைச்சட்டங்கள் வெளியாகிறதற்கு முன்னிருக்கும் சாப்பாட்டுச்சாலைகளை யுடையவர்கள் இந்தக் கட்டளைச்சட்டம் வெளிப்பட்ட 30 நாளைகளுள் மேற்சொன்னபடி அறிவித்தல்வேண்டும். எந்தச் சாப்பாட்டுச்சாலைகளும் எவர்களுடைய பாரத்திலிருக்கிறதோ அவர்களையே அச்சாப்பாட்டுக்கடை யுடையவர்களென்றும் அல்லது மேற்பார்வைக்காரர்களென்றும் சாட்டப்படும்.

(2) 298 ம் 300 ம் 302 (1) ம் 302 (2) ம் கட்டளைச்சட்டங்களின் பிரபந்தங்களுக் கிசைய சாப்பாட்டுச் சாலைகள் நடத்தப்படல் வேண்டும். சாப்பாட்டுச் சாலையென்னுஞ் சொல் சோறு விற்குமிடமும் உட்பட, ஆனால் 1891 ம் ஆண்டின் உத்தரவுச் சீட்டிலிருக்குஞ் சட்டத்தின் பிரகாரம் உத்தரவுச் சீட்டுப்பெற்ற வீடுகளைக் குறித்தல்ல.

304 அப்பஞ்சுடுமிடம் பரிசோதனைக்குட்படுதல்.—அப்பஞ்சுடப்படுமிடமொவ்வொன்றும் அவைகளை நடத்தும் வகையும் அங்கு நடைபெறுந் தொழிலும் எப்போதும் நகரசங்கத்தின் தலைவர் நகரசுக வைத்தியர் நகரசங்கத்தலைவரின் உத்தரவுபெற்றவர்களாகிய இவர்கள் எல்லாரின் பரிசோதனைக் குட்பட்டதாயிருத்தல்வேண்டும்.

---

[Proclamations of Rules under the Paddy Cultivation Ordinance, Nuwarakalawiya, North-Central Province.]

பெரிய பிரித்தானியும் அயர்லாந்துமாகிய ஐக்கிய இராட்சியத்துக்கும் கடல்களுக்கு அப்புறத்தனவாகிய பிரிட்டிஷ் ஆதிபத்திய நாடுகளுக்கும் இராசாவும் சமயபரிபாலகருமாகிய மகத்துவவாய்ந்த ஐந்தாம் ஜோர்ஜ் அவர்கள் நாமத்தினாலே:

சென்ற் மைக்கேல் அன் சென்ற் ஜோர்ஜ் என்னும் மிக மேன்மைபொருந்திய வரிசையின் இருள் ரூமேன்
கமிற் பட்டவர்த்தனரும் இலங்கைக்கும் அதைச்சார்ந்த நாடுகளுக்கும் தேசாதிபதியவர்களும்
சேனாதிபதியும் ஆகிய உத்தமஸ்ரீ சேர் ஹென்ரி எட்வார்ட் மக்கல்லம் அவர்கள்செய்யும்

## விளம்பரம்.

ஹென்ரி மக்கல்லம்,

1867 ம் ஆண்டின் நீர்ப்பாய்ச்சற் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி வடமத்திய மாகாணத்து நுவரகலாவிய பகுதியிலுள்ள காணிக்காரரால் உண்டாக்கப்பட்டு அதிகார மந்திரசபையோடுகூடிய தேசாதிபதியவர்களது சம்மதம் பெற்ற சில குறித்த விதிகள், 1868 ம் ஆண்டு மார்கழிமாதம் 29 ந் தேதியைக்கொண்ட விளம்பரத்தால் முறைப்படி வெளிப்படுத்தப்பட்டன.

மேற்படி மாகாணத்து அரசாட்சி ஏஜன்ற், 1906 ம் ஆண்டின் 16 ம் இலக்கச்சட்டத்து 21 ம் பிரிவின்படி நுவரகலாவியாப்பகுதியில் நுவரகம்கோறளை, எப்பாவலைக்கோறளை, கலாகம்கோறளை வடக்கு என்னும் உபபிரிவுகளில் அமைந்த பிரசித்த கூட்டங்களிலே, மேற்படி விதிகளில் 13 ம் விதியானது இதனோடிணைந்திருக்கும் அட்டவணையிற் காட்டியபடி திருத்தப்பட்டு, மேற்படி பிரிவின் ஏற்பாடுகளின்படி சம்மதம்பெறுதற்காக அல்லது விலக்குதற்காகத் தேசாதிபதியவர்களுக்கு மேற்படி அரசாட்சி ஏஜன்றால் அனுப்பப்பட்டது, அதனாலும்:

மேற்படி தேசாதிபதியானவர், மேற்படி 21 ம் பிரிவினால் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைச் செலுத்தியும், மேற்படி ஆலோசனைசபையின் ஆலோசனைப்படி மேற்படி விதியைத் திருத்துவதற்கு நமக்குச் சம்மதந்தான் என்று இந்த நமது விளம்பரத்தால் தெரிவிக்கிறோமென்று நீவிர் இப்பொழுது அறிந்துகொள்வீராக.

மேலும் மேற்படி விளம்பரத்தை மற்றைய காரியங்களிலெல்லாம் பலப்படுத்துகிறோம்.

எங்கள் ஆண்டவரின் வருஷம் ஆயிரத்துத் தொளாயிரத்துப் பத்தாம் ஜூன் (ஆனி)மாதம் பதினாலாந் தேதியின்று மேற்படி தீவில் கண்டியில் கொடுத்தது.

மகோத்தம அவர்களினது கட்டளைப்படி,
எச். எல். கிறவ்வோட்,
காலனிக் காரியதரிசி.

இராஜாவை தேவன் காப்பாற்றியருள்வாராக.

---

அட்டவணை.

1868 ம் ஆண்டு மார்கழிமாதம் 29 ந் தேதியைக்கொண்ட மேற்சொல்லிய விளம்பரத்தால் பிரசித்தப்படுத்திய விதிகளில் 13 ம் விதியோடு பின்சொல்லும் கிளைத்தனைக் கூட்டுவது:—

அரசாட்சி ஏஜன்றுத்துரையின் எண்ணத்தில் சனங்களின் பொது நன்மைக்காகத் தண்ணீரை நியாயமாயுஞ் சரியாயும் அதி பலன்படத்தக்க விதமே பிரிக்கத்தக்கதாயும், தண்ணீர் முழுவதுஞ் சரியே பாவிக்கப்படுகிறதென்று திட்டப்படும்படியும, பயிர்காலங்களை வரையறைசெய்வது புத்தியாயிருந்தால், அவர் தமக்குத் தோற்றுகிறபடி நியாயமென்று காணுகிற காலங்களைக் குறிக்கும் தத்துவம் அவருக்கு உண்டு.

---

## LAND SALES.

### காணி விற்பனவுகள்.

No. 599, N. P.—1910 ம் ஆண்டு ஆவணிமாதம் 9 ந் திகதி, செவ்வாய்க்கிழமை, காலமே 11 மணியளவில், தன் ஆபிசில், வடமாகாணத்து கவர்ண்மேந்து ஏஜன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் பொருத்தப் பிரகாரம் விற்கப்படும் அல்லது உரித்து முடிவுசெய்யப்படும். 5 காணித்துண்டுகள், யாழ்ப்பாணப்பட்டினத்திலிருந்து வலிகாமம் மேற்கு பகுதியிலுள்ள, பூனகரி முதலியப் பகுதிகளிலிருக்கின்றது.

பிளான் இல. 1,101. உரித்தாளி—அரசாட்சி.

| காணித்துண்டு இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விஸ்தீரணம். ஏ. | று. | ப. | மதிப்புக்குத் தீர்ப்புவிலை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 3681½ | சங்கானை | சபாபதி குழந்தைவேலு கூட்டுச்சேர்ந்தது | தென்னம்பிள்ளை வைக்கப்பட்ட நிலம் | 0 | 0 | 9 | 400 |
| | | | பிளான் இல. 3,642. | | | | |
| 38 | சிறாவ்புரம் | கதிர்த்தம்பி சின்னத்தம்பி | அந்தக்கண்டத்தில் ஒரு கோவில் கட்டப்பட்டிருக்கிறது | 0 | 1 | 5 | 16 |
| 39 | டிை. | டிை. | அந்தக்கண்டத்தில் ஒரு குளம் இருக்கிறது | 0 | 0 | 29 | 16 |
| | | | பிளான் இல. 3,603. | | | | |
| 13404 | முகமாலை | — | பனைமரங்களுள்ள காடு | 18 | 1 | 6 | 25 |
| | | | பிளான் இல. 3,633. | | | | |
| 19 | [illegible] | கே. கணபதி | தென்னம்பிள்ளைக்குத்தகுந்த காடு | 4 | 3 | 0 | 21 |

இக்காணிகளைப்பற்றிய மேலதிக விபரங்கள் வடமாகாணம் கவண்மேந்து ஏஜன்றிடத்திலும் படங்களைப்பற்றி அளவைத் தொழில் பெரியதுரை யிடத்திலும் அறிந்துகொள்ளலாம்.

கொலோனியல் செகிரட்டரி ஆபிசில்,
கொழும்பில், 1910 ம் ஆண்டு ஆனி (ஜூன்)மீ 16 ந் உ.

எச். எல். கிறவ்வோட்,
காலனிக் காரியதரிசி.

No. 1,238, E. P.—1910 ம் ஆண்டு ஆடிமாதம் 28 ந் திகதி, வியாழக்கிழமை, பகல், தன் ஆபீசில் கிழ மாகாணத்து திரிகோணமலை உதவிகவர்மெந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம், ஏலத்திற்கூறி விற்கப்படும். 12 காணித்துண்டுகள், கிழ மாகாணத்து திரிகோணமலை டிஸ்திரிக்கின் பட்டணம் கொட்டியாபுரம், தம்பலகமம் பகுதிகளி லிருக்கின்றது.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. அ. ப. | குறிப்பு விலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|
| | | பிளான் இல. 4,128. உரித்தாளி—அரசாட்சி. | | | |
| 94957 | மாவகணும் | அம்பலம்பின்னைப்பொடி | தென்னைக்கேற்றது | 3 1 18 | 18 |
| | | பிளான் இல. 4,129. | | | |
| 94959 | சல்லி | வீ. பராக்கிரமன் | தோட்டத்துக்கேற்றது | 3 1 24 | 18 |
| | | பிளான் இல. 4,178. | | | |
| 207 | மாவகணும் | கே. சின்னத்தம்பி | தென்னைக்கேற்றது | 1 0 12 | 15 |
| | | பிளான் இல. 4,026. | | | |
| 94583 | சின்னக்கன்னியா | மகமது அப்துல்லா | தோட்டத்துக்கேற்றது | 1 3 36 | 20 |
| 94584 | டிை. | டிை. | டிை. | 0 3 38 | 20 |
| | | பிளான் இல. 3,991. | | | |
| 94443 | கிளிவெட்டி | கே. அகிலேசபிள்ளை | நெற்கேற்றது | 0 3 12 | 20 |
| | | பிளான் இல. 2,633. | | | |
| 77177 | மல்லிகைத்தீவு | — | நெற்கேற்றது | 9 0 21 | 19 |
| 77184 | டிை. | — | டிை. | 17 1 0 | 19 |
| | | பிளான் இல. 3,509. | | | |
| 92416 | பள்ளிக்குடியிருப்பு | ஏ. பவளித்தம்பி | தென்னைக்கேற்றது | 4 2 10 | 15 |
| | | பிளான் இல. 4,130. | | | |
| 94931 | சின்னக்கிண்ணியா | பீ. அலியார்த்தம்பி | தோட்டத்துக்கேற்றது, மீராலெப்பை அசனால் ஆட்சிபண்ணப்பட்டுவருகுது | 0 0 28 | 15 |
| | | பிளான் இல. 4,090. | | | |
| 9481 | தம்பலகமம் | ஏ. கதிரவேலு | நெற்கேற்றது | 1 2 24 | 16 |
| | | பிளான் இல. 698. | | | |
| 861 | டிை. | — | வெறுந்தரை | 1 2 3 | 15 |

இக்காணிகளைப்பற்றிய மேலதிக விபரங்கள் திரிகோணமலை உதவி கவர்மெந்து ஏசன்றுத்துரையிடத்திலும் படங்களைப்பற்றிய விபரங்கள் அளவைத்தலைவரிடத்திலுமிருந்து அறிந்துகொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறத்தார் ஆபிசில்,
கொழும்பில், 1910 ம் ஞ ஜுனி மீ 9 ந் உ.

எச். எல். கிறெவ்வோட்,
எக்டிங் கொலோனியல் சக்கிறத்தார்.

No. 1,239, E. P.—1910 ம் ஆண்டு ஆடிமாதம் 22 ந் திகதியாகிய வெள்ளிக்கிழமை, பிற்பகல் ஒரு மணிக்கு, கிழக்கு மாகாணத்து கவர்மெந்து ஏசன்றவர்களால் தனது ஆபீசில் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற வாயிதாபணம்கட்டாதபடிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் ஏலத்திற்கூறி விற்பார். காணித்துண்டுகள், கிழக்கு மாகாணத்து மட்டக்களப்பு டிஸ்திரிக்கி லிருக்கின்றன.

| பா. இல. | காணித்துண்டின் இல. | குறிச்சி. | வாயிதாகட்டாதவரின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. அ. ப. | குறிப்புவிலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|
| | | | விந்தனைப்பற்று. | | | |
| 3896 | 93983 | பூலாவெளி | ஆ. பொன்னையா | வேளாண்மைப் பூமி | 1 2 36 | 15 |
| | | | ஏறாவூர்பற்று. | | | |
| 3839 | 93801 & 802 | பங்குடாவெளி | வே. நல்லதம்பி | டிை. | 2 3 32 | 15 |
| 3573 | 92663 | கொடுவாமடு | பா. வைகாளியு மறுபேரும் | டிை. | 4 0 26 | 25 |
| 3077 | Y 85 | புத்தம்புரி | மெ. அகமதுலெவ்வைப்போடி | டிை. | 8 0 20 | 15 |
| ,, | A 86 | டிை. | கு. கணபதிப்பிள்ளை | டிை. | 0 3 5 | 15 |
| ,, | B 86 | டிை. | டிை. | டிை. | 7 0 24 | 15 |
| | | | கோறளைப்பற்று. | | | |
| 3645 | 93140 | கதிரவெளி | க. இளையதம்பி | டிை. | 4 0 26 | 15 |
| 3399 | 91583 | ஓட்டைமாவடி | செ. இஸ்மாலெவ்வையு மறுபேரும் | டிை. | 9 3 20 | 30 |
| ,, | 91624 | டிை. | ஆ. அவுவக்கர்லெவ்வைப்போடி உடையார் | டிை. | 3 1 30 | 30 |
| ,, | 91845 | டிை. | சா. உசன்சாய்வு | டிை. | 9 3 38 | 30 |
| ,, | 91856 | டிை. | உ. முகம்மதுத்தம்பியு மறுபேரும் | டிை. | 9 0 24 | 30 |
| ,, | 91867 | டிை. | வா. அகமதுலெவ்வை | டிை. | 10 0 0 | 30 |
| | | | சம்மாந்துறைப்பற்று. | | | |
| 3883 | 93945 | அக்கிலாவெளி | க. வைரமுத்துவு மறுபேரும் | டிை. | 9 1 30 | 17·50 |
| | | | விந்தனைப்பற்று. | | | |
| 4035 | 94604 | புல்லுமலை | கி. கன்னாளிசவுரி | தோட்டப் பூமி | 1 0 32 | 17·50 |
| 3950 | 94260 | வேடர் குடியிருப்பு | கு. மு. கிரியண்டா ஆராச்சி | டிை. | 1 2 30 | 15 |
| | | | ஏறாவூர்பற்று. | | | |
| 3177 | Z 85 | புத்தம்புரி | மெ. அகமதுலெவ்வைப்போடி | டிை. | 1 2 28 | 15 |
| | | | கோறளைப்பற்று. | | | |
| 3882 | 93944 | சந்திவெளி | ஏ. கனகசபை | டிை. | 4 1 14 | 20 |
| 3688 | 93281 | கிரான் | மீ. ம. அகமது மெய்தீன் | டிை. | 1 3 0 | 15 |
| ,, | 93283 | டிை. | டிை. | டிை. | 1 2 17 | 15 |
| 3835 | 93791 | புலவாவி | சே. மீரா சாய்வு | டிை. | 2 3 34 | 15 |
| 3919 | 94041 | வாகநேரி | அ. ப. அகமதுலெவ்வை | டிை. | 0 2 8 | 30 |
| 3932 | 94075 | டிை. | டிை. | டிை. | 0 1 4 | 30 |
| 4004 | 94497 | கதிரவெளி | வை. வீரக்குட்டியு மறுபேரும் | டிை. | 1 2 14 | 15 |
| 3818 | 93745 | பட்டிபோட்டமடு | மீ. அலி உதுமாலெவ்வை | டிை. | 0 2 8 | 15 |
| | | | மண்முனைப்பற்று. | | | |
| 3752 | 93540 | அவரையடிமடு | உ. முகம்மதுத்தம்பி | டிை. | 1 3 37 | 15 |
| 3972 | 94406 | காவெட்டி | வா. சின்னத்தம்பி | டிை. | 1 3 15 | 15 |
| 4008, ,, ,, | 94516, 94517, 94518 | மாங்காடு | நா. குமாரப்பெருமாள் உடையார் | டிை. | 0 3 38 | 25 |
| 4103 | 94901 | முதலக்குடா | க. வெள்ளையப்போடி | டிை. | 1 1 28 | 20 |
| | | | களுவாஞ்சிக்குடிப்பற்று. | | | |
| 3634 | 93250 | பெரியநீலாவணை | வ. பார்பதியார் | டிை. | 0 3 26 | 20 |

இக்காணிகளைப்பற்றிய மேலதிகமான விளம்பரங்களையும் விற்பனவின் கொந்திசன்களைப்பற்றியும் மட்டக்களப்பு அரசாட்சி ஏசன்றுத்துரையவர்களிடம் விசாரித்து அறிந்துகொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறத்தார் ஆபிஸ்,
கொழும்பில், 1910 ம் ஞ ஜூன் (ஆனி) மீ 9 ந் உ.

எச். எல். கிறெவ்வோட்,
எக்டிங் கொலோனியல் சக்கிறத்தார்.

No. 1,240, E. P.—1910 ம் ஆண்டு ஆடிமாதம் 29 ந் திகதியாகிய வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கிழக்கு மாகாணத்து கவர்ன்மேந்து ஏசன்றவர்கள் தனது ஆபிசில் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் ஏலத்திற்கூறி விற்பார். காணித்துண்டுகள், கிழக்கு மாகாணத்து மட்டுக்களப்பு டிஸ்திரிக்கிலிருக்கின்றன.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | அ. | ப. | தரிப்பு விலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | | பிளான் இல. 1,202. மண்முனைப்பற்று தென்பகுதி. உரித்தாவி—முடி. | | | | | |
| 2414 | மூலைக்காடு | பொதுவிற்பனவு | காடு | 4 | 2 | 34 | 15 |
| 2415 | ஷை. | ஷை. | காடு | 5 | 1 | 3 | 15 |
| 2416 | ஷை. | ஷை. | காடு | 1 | 0 | 34 | 15 |
| 2417 | ஷை. | ஷை. | காடு | 1 | 0 | 33 | 15 |
| 2418 | ஷை. | க. அத்தியாமுல்லை | காடுந்தென்னந்தோட்டமும் | 1 | 3 | 17 | 15 |
| 2419 | ஷை. | பொதுவிற்பனவு | காடு | 0 | 3 | 36 | 15 |
| 2421 | ஷை. | கா. மூத்ததம்பி | காடுந்தென்னந்தோட்டமும் | 1 | 0 | 34 | 15 |
| 2422 | ஷை. | க. உஸ்மண்டான் | காடு | 0 | 3 | 10 | 15 |
| 2423 | ஷை. | க. முத்தையாப்போடி | காடு | 0 | 3 | 24 | 15 |
| 2424 | ஷை. | க. அத்தியாமுல்லை | காடுந்தென்னந்தோட்டமும் | 1 | 0 | 10 | 15 |
| 2429 | ஷை. | நா. கணவதியான் | காடு | 1 | 0 | 4 | 15 |
| 2431 | ஷை. | வ. வீ. முருகப்பன் | காடு | 0 | 2 | 34 | 15 |
| 2432 | ஷை. | மு. கதிராமன் | காடு | 0 | 3 | 27 | 15 |
| 2437 | ஷை. | வ. கன்னுப்பணிக்கன். | வெட்டைப்பூமி | 0 | 3 | 25 | 15 |
| 2439 | ஷை. | பொதுவிற்பனவு | ஷை. | 0 | 1 | 3 | 15 |
| | | படம் 3,346. கோறளைப்பற்று. உரித்தாவி—முடி. | | | | | |
| 90377 | களுவன்கேணி | யோ. தீ. திசவீரசிங்கம் | காடு | 15 | 2 | 0 | 15 |
| 90378 | ஷை. | ஷை. | காடு | 13 | 2 | 16 | 15 |
| 90379 | ஷை. | பொதுவிற்பனவு | காடு | 13 | 0 | 30 | 15 |
| 90380 | ஷை. | ஷை. | காடு | 15 | 0 | 0 | 15 |
| 90381 | ஷை. | ஷை. | காடு | 16 | 3 | 26 | 15 |
| 90383 | ஷை. | ஷை. | காடு | 15 | 2 | 12 | 15 |
| 90384 | ஷை. | ஷை. | காடு | 11 | 1 | 30 | 15 |
| 91385 | ஷை. | ஷை. | தோட்டம் | 0 | 3 | 17 | 15 |
| | | படம் 4,146. சம்மாந்துறைப்பற்று. உரித்தாவி—முடி. | | | | | |
| 8 | சொறிக்கல்முனை | ஞ. குருசு | காடு | 2 | 2 | 39 | 15 |
| | | படம் 957. விந்தனைப்பற்று. உரித்தாவி—முடி. | | | | | |
| 11847 | கேவிலல | பு. பு. வண்டா | காடு | 12 | 2 | 3 | 15 |

இக்காணிகளைப்பற்றிய மேலதிகமான விளம்பரங்களையும் விற்பனவின் நொத்திசுகளைப்பற்றியும் மட்டுக்களப்பு அரசாட்சி ஏசன்றுத்துரையவர்களிடத்திலும் விசுவி அறிந்துகொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறத்தார் ஆபிசில்,
கொழும்பில், 1910 ம் ஆண்டு ஜுன் (ஆனி)மீ 16 ந் உ.

எச். எல். கிருவ்வோட்,
எக்டிங் இராசாங்க லிகிதர்.

## LAND ACQUISITION NOTICES.

### அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

[Mutwal, Colombo District.]

1876 ம் ஆண்டு 3 இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் புறக்காவல் நிலைகளுக்காக என்று சொல்லப்படும் "றக்கவுஸ" பீரங்கி நிரைக்காக என்றும் பகிரகதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அத்தாவது :—

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| | | பிரதமபடத்து இல. 14,337. குறிச்சி—முத்துவால். | | | | |
| Q 2 | அர்ச். அந்திரேயர் கோவில் | இடிதத சுவரும் படியும் | அர்ச். அந்திரேயர் கோவில்காரருக்கு | 0 | 0 | 2·25 |
| R 2 | ஷை. | வெளிநிலமும் சார்களும் | ஷை. | 0 | 0 | 1·12 |
| S 2 | துக்கிரவத்தை | வெளிநிலமும் ஒட்டால்வேய்ந்த வீடும் | எஸ். டீ. டோறு பொறலன்திறுவில்வா, றன வலக்க டின்கு பறுநாந்துவால் வீட்டுக்கு உருத்துப்பேசப்படுகிறது | 0 | 0 | 2·75 |
| T 2 | ஷை. | ஷை. | யோறனிஸ் பறுநான்துவால் நிலத்துக்கு உருததுப்பேசப்படுகிறது | 0 | 0 | 1·87 |
| U 2 | ஷை. | ஷை. | எடிவின் பறுநான்து | 0 | 0 | 2·62 |
| V 2 | ஷை. | ஒட்டால வேய்ந்த வீடு | இசன் பறுநான்துவும் இன்னும் ஒரு ஆளும் | 0 | 0 | 3·75 |
| W 2 | ஷை. | வெளிநிலம் | றன்வலகே மாட்டினு பறுநான்து | 0 | 0 | 3·40 |
| X 2 | ஷை. | ஒட்டாவி வேய்ந்தவீடும் வெளிநிலமும் | அன்னமறிய றட்றீக்கா | 0 | 0 | 4·12 |
| Y 2 | தெம்பிலிகாவத்தை | வெளிநிலம் | டோறு அனத்திசா பறுநாந்து | 0 | 0 | 2·75 |
| Z 2 | ஷை. | ஒட்டால்வேய்ந்த வீடு | டமின்கு ஆருச்சிகேடன் வில்லியம் பறுநாந்து | 0 | 0 | 2·62 |
| A 3 | ஷை. | ஷை. | ஜெருமானிஸ் பறுநாந்து | 0 | 0 | 1 |
| B 3 | ஷை. | ஒட்டால்வேய்ந்த வீடும் வெளிநிலமும் | புளைச பறுநாநது | 0 | 0 | 2 |
| C 3 | ஷை. | வெளிநிலம் | கத்திறு பறுநாந்து | 0 | 0 | 6·25 |
| D 3 | ஷை. | ஷை. | ஷை. | 0 | 0 | 0·25 |
| E 3 | ஷை. | வெளிநிலமும்ஒட்டால் வேய்ந்தவீடும் | ஏ. எஸ். றீ. கதறிநு கொறியா | 0 | 0 | 4·87 |
| F 3 | ஷை. | ஷை. | கே. அன்டிறி பொர்னுண்டோ | 0 | 0 | 7·68 |
| G 3 | ஷை. | ஷை. | மதியா றட்றிகோ | 0 | 0 | 5·40 |
| H 3 | ஷை. | ஷை. | அன்னமறியா டயஸ் | 0 | 0 | 5·16 |
| I 3 | ஷை. | ஒட்டால் வேய்ந்தவீடு பலகைஅடித்த கக்கூசும் தோட்டமும் | காலஞ்சென்றுபோன ஆர். கார்மா பறுநாந்துவின் உருத்தாளிகளுக்கு | 0 | 0 | 26 |
| J 3 | ஷை. | தென்னந்தோட்டம் | ஜே. டபிள்யு. ஆர். இலங்ககோன் | 0 | 0 | 6·50 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டுத்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1910 ம் ஆண்டு ஆடிமீ 11 ந் தேதியிலன்று 11 மணிக்கு காலமே கொழும்புக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமது அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1910 ம் ஆண்டு ஆனிமீ 15 ந் உ.

சீ. டீ. வைக்கேர்ஸ்,
அரசாட்சி ஏசன்டு.

[Wellawatta, Colombo District.]

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கரையோரத்தில் என்னும் ஒரு தெருவ்பாதை போடுகிறதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 14,050. குறிச்சி—வெள்ளவத்தை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| Q 905½ | குடா வெல்லவத்தை | தெருவுக்காக பிடித்துவைத்த வெறுநிலம் | எஸ். ஆர். சோக்மன் பெண்சாதி | 0 | 0 | 1·60 |
| S 905½ | டிஷ. | டிஷ. | டிஷ. | 0 | 0 | 0 83 |
| Y 905½ | டிஷ. | டிஷ. | டபிள்யு. எல். கார்து பெண்சாதி | 0 | 0 | 0 37 |
| E 906½ | டிஷ. | டிஷ. | டபிள்யு. கவுதர் பெண்சாதி | 0 | 0 | 0 70 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சியொப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1910 ம் ௵ ஆடி௴ 11 ந் தேதியன்று 11 மணிக்கு காலமே கொழும்புக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1910 ம் ௵ ஆனி௴ 15 ந் ௳.

சீ. உ. வைக்கர்ஸ்,
அரசாட்சி ஏஜண்டு.

---

[Tihariya, Colombo District.]

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் திகரியாவில் ஓர் ஆண்பாடசாலைக்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 14,325. குறிச்சி—திகரியா.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| N 2 | தம்புகாருஅந்தவத்தை | 20 வருஷஞ் சென்ற தென்னம்பிள்ளைகள் உள்ளது | காலஞ்சென்றுபோன மகாமுதலியார் ஜே. ஈ. பெறயிருவின் தோட்டம் | 1 | 0 | 5·50 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1910.ம் ௵ ஆடிமாசம் 11 ந் தேதியன்று காலமே 11 மணிக்கு கொழும்பு கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்பு கச்சேரி,
1910 ம் ௵ ஆனி௴ 15 ந் ௳.

சீ. உ. வைக்கர்ஸ்,
மேல் மாகாண அரசாட்சி ஏஜண்டு.

---

[Periyakaddu, Mullaittivu District.]

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மன்னூர் புகையிரதபாதையைத்திறத்தல் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 3,664. குறிச்சி—பெரியகட்டு.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின பெயர். | விசாலம், ஏ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| D | புளியடிக்காடு | காடு | கௌ. கென்றி ஈவ்லன் யாழ்ப்பாண மேற்றிராணியார் | 0 | 2 | 0 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1910 ம் ௵ ஆடிமாசம் 28 ந் திகதியன்று 12 மணிக்கு வவுனியாவில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

முல்லைத்தீவுக் கச்சேரி,
1910 ம் ௵ ஆனி௴ 11 ந் ௳.

ஈ. தீ. டையுக்ஸ்,
உதவி அரசாட்சி ஏஜண்டு.

---

[Kegalla Town.]

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் அரசாட்சிக் கந்தோர்களுக்கு முன்பாகக் கடைகள் முதலியனவை உதிப்பதைத் தடைபண்ணுவதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 1,928. குறிச்சி—கேகல்லை டவுன்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| Z | வெலிகத்தகேவத்த | தென்னை முதலியனவை அடங்கிய தோட்டம் | கேகாலையிலிருக்கும் டோரு பொற வென்கிருகாமினி | 0 | 0 | 10 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சியொப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1910 ம் ௵ ஆடிமாதம் 9 ந் திகதியன்று 1 மணிக்கு கேகாலைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கேகாலைக் கச்சேரி,
1910 ம் ௵ ஆனி௴ 14 ந் ௳.

ஜே. டொன்ருய்,
உதவி அரசாட்சி ஏஜண்டு.

# PRELIMINARY NOTICES, WASTE LAND SETTLEMENT.

## உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[Hambantota S. O. 42—1910.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1910 ம் ஞு ஜூன் (ஆனி)மீ 17 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாழ்நிலச் சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் எம். இஸ்ரீவின்சன் துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையில் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய சொத்தெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

எம். இஸ்ரீவின்சன்,
விசேஷ உத்தியோகத்தர்.

---

சுட்டிய காணியின் விவரம்.

தென் மாகாணம் அம்பாந்தோட்டை டிஸ்திரிக்குக் கிறுவாப்பத்துக் கிழக்கைச்சேர்ந்த திக்வல என்னும் கிராமத்தின்கண் இத்துடன் இணைக்கப்படும் *படப்பிரதியில் விவரித்தபடியே, 2 அட்டு 12 பேர்ச்சு விசாலமுடையதும், சாமானியமாய் திக்வலகெல்ல என்னும் பெயரினால் அழைக்கப்பட்டு அல்லது அறியப்பட்டுவருவதும் 441 ம் பிரதமபடத்தில் 2e ம் துண்டாய்க் காட்டப்பட்டதுமான காணி. இதற்கெல்லைகளாவன: வடக்கு-பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட திக்வலயேன; கிழக்கு-ஓர் காலடிப்பாதை; தெற்கு-பெருமதியில் அளவிலக்குக் கொடுக்கப்பட்ட கொஸ்காவத்தை; மேற்கு-தெகிங் விஜயகுணசேகர யுவானிசும் முடியும் உரித்துப்பேசும் ஒவ்வினியன்காவத்தை.

3,773 * இக்கிலீசின் நான்காம் பாகம் 747 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்க.

---

[Midigama, Matara District.]

இதின்பின் சொல்லப்படும் காணிகளுக்கு யேதும் உரித்துச்சொல்லுகிறவர்கள் யாருமிருப்பாராகில், அவர்கள், 1910 ம் ஆண்டு ஜூன்மீ 17 ந் தேதி துவக்கம் மூன்று மாசத் தவணைக்குள் மாத்துறைக் கச்சேரியில் வைத்து மாத்துறை டிஸ்திரிக்கின் உதவி ஏஜண்ட்துரை அவர்களின் முகதாவில் வெளிப்பட்டு மேல்சொல்லிய காணிகளுக்கல்லது அதுகளிலொரு பாகத்துக்கு விருக்கும் உரித்தைச் சொல்லிதிக்காவிட்டால் மேல்சொல்லிய உதவி ஏஜண்ட்துரை அவர்களால் அவர்களுக்கு 1897, 1899, 1900, 1903 ம் ஆண்டுகளின் வெண்காணி சட்டங்களச்சட்டத்தால் கொடுத்திருக்கும் அதிகாரத்தின் பிரகாரம் உரித்துச்சொல்லாமல்விட்ட மேல்சொல்லிய காணிகளை அரசாட்சியாரின் காணிகளென்று அவர்களின் கையொப்பமுள்ள எழுத்தால் கூறப்படுமென்பதை இதனுல் அறிந்துகொள்ளவேண்டும்.

டபிள்யு. எல். கின்டர்ஸ்லி,
உதவி அரசாட்சி ஏஜண்ட்.

---

காணிகளின் விபரம்.

தென் மாகாணம் மாத்துறை டிஸ்திரிக்கு வலிதும் கோறளையைச்சேர்ந்த மிதிகம வென்னும் கிராமத்திலிருக்கும் இத்துடனிணைத்திருக்கும் *உறுதிப்படுத்திய படப்பிரதியில் காணும் காணிகளாவன:

பிரதம பிளான் 8,578.

| காணிப்பிரதி. | | காணியின் பெயர். | | | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|---|---|
| T 597 | ... | விதானகே கன்பொறலுவேஹேன அல்லது வெதம்கேஹேன ... | ... | ... | 1 1 35 |
| U 597 | ... | விதானகே கன்பொறலுவ அல்லது படதும்பஹேன ... | ... | ... | 4 1 26 |
| | | | | | 5 3 21 |

எல்லை: வடக்கு-வி. பீ. டீ. கிலோரிஸ் மற்றவரும் உரித்துப்பேசும் படதும்பயேன, ஜே. வீ. பீ. டீ சில்வாவும் மற்றவரும் உரித்துப்பேசும் விதானகே கன்பொறலுவ அல்லது படதும்பயேன, தொன் கிலோரிஸ் குணசில ஜயவர்தனவும் மற்றவரும் உரித்துப்பேசும் படதும்பயேனஹேவ, ஜே. வீ. பபஅப்பு டீ சில்வாவும் மற்றவரும் உரித்துப்பேசும் ஹம்பமுள்ளேவத்தேஹேவ; கிழக்கு-கோன்காவத்தகே கொறனேலிஸ் மற்றவரும் உரித்துப்பேசும் ஹம்பமுள்ளேவத்த; தெற்கு-ஜே. வீ. பபஅப்பு டீ சில்வாவும் மற்றவரும் உரித்துப்பேசும் கஹடகஹகொறட்டுவ, கிறுவளி, ஜே. வீ. சாமல்அப்பவும் மற்றவரும் உரித்துப்பேசும் கிதிமட்டிதொடுவெதெனிய; மேற்கு-ஜயசேகர விதானகே பபஅப்பு டீ சில்வா உரித்துப்பேசும் கன்பொறலுவயேன.

3,774 * இக்கிலீசின் நான்காம் பாகம் 748 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்க.

---

[Tender for certain Miscellaneous Services, Civil Medical Department, Colombo.]

கொந்திறுத்து ஒப்பந்தக் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதி துவக்கம் 1911 ம் ஆண்டு ஆனிமீ 30 ந் திகதி வரைக்கும் பின்வரும் காணப்படும் விபரங்களுக்கு கொந்தறுத்து ஒப்பந்தம் செய்யவிரும்புகிறவர்கள் ஒப்பந்தக் கேள்விக்கடதாசிகளை அனுப்பும்படி இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்:

(1) கொழும்பிலுள்ள சில ஆசுபத்திரிகளிலிருந்தும், மருந்தாலங்களிலிருந்தும் வெலிக்கடை மறியல் வீட்டுக்கு அனுக்குசிலைகளைக் கொண்டுபோவதற்கும் அங்கிருந்து கொண்டுவருவதற்கும்.

(2) கொழும்பிலுள்ள ஆசுபத்திரிகள், மருந்தாலங்கள் இவைகளிலிருந்தும் வைத்திய கல்லூரியிலிருந்தும் ஜெனறல் சிம்றறி என்னும் பிரேத அடக்கம்பண்ணும் இடத்திற்கு பிரேதங்களைக் கொண்டுபோகிற வண்டிக்கும், மாட்டுக்கும், வண்டில்செலுத்தும் ஆளுக்கும்.

(3) கொழும்பு எந்தப்பாகங்களிலாவதில் இருக்கும் குஷ்டரோகிகளை, கெந்தலை குஷ்டரோக ஆசுபத்திரிக்கு கொண்டுபோகிறதற்கு லேடிகலைக் ஆசுபத்திரியில் வைத்திருக்கும் வண்டிக்கும் மாட்டுக்கும் வண்டி செலுத்தும் ஆளுக்கும்.

(4) கொழும்பு பெரிய ஆசுபத்திரியிலிருந்து மருதானை றயில்வே ஸ்டேசனுக்கு வருத்தக்காரரை கொண்டுபோகிறதற்கு வண்டிக்கும் மாட்டுக்கும் வண்டில் செலுத்தும் ஆளுக்கும்.

2. கொந்திறுத்து ஒப்பந்தக் கேள்விகளை இரண்டு கொபபிகளில் எழுதி ஒரே தபாலுறையில் வைத்து முத்திரையிட்டு, "பிரதான சிவில் மெடிக்கல் ஒப்பிசர் கொழும்பு" என்று மேல்விலாசமும் எழுதி அனுப்பல் வேண்டும்.

3. கேள்விக்கடுதாசிகளை பிரதான சிவில் மெடிக்கல் கந்தோரில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும் அல்லது தபால் மார்க்கமாய் அங்கே அனுப்பவேண்டும்.

4. கேள்விக்கடுதாசிகள் அனுப்பப்படும் உறையின் புறத்தில் இடதுகை மேல்மூலையில் "மிஸலேனியஸ் சேவிஸ் சுக்காக அனுப்பப்படும் ஒப்பந்தக் கேள்விக்கடதாசி" என்று எழுதல் வேண்டும். கேள்விக்கடுதாசிகள் பிரதான சிவில் மெடிக்கல் கந்தோரில் 1910 ம் ஞு ஆடிமீ 2 ந் திகதி மத்தியானத்துக்குப் பிந்தாமல் சேரல்வேண்டும்.

5. அச்சிட்ட கொத்திருத்த ஒப்பந்தக்கேள்விக்கடுதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக் கேள்விகள் எழுதி அனுப்ப வேண்டும். இந்தக் கேள்விபத்திரங்கள் கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசில் பெற்றுக்கொள்ளலாம். அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. இந்தக் கேள்விப்பத்திரத்தில் யாதேனும் மாற்றங்கள் செய்தால் அம்மாற்றங்களுக்கு ஒப்பந்தக் கேள்விக்காரன் கைச்சாத்திட வேண்டும். அப்படிச் செய்யத்தவறினால் கேள்வி சரியீனமாகக்கண்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. அச்சிட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் ஒவ்வொருவரும் முற்பணம் ரூபா 50 கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டுவரல் வேண்டும். கொத்திருத்தக் கேள்விகள் எழுதி யனுப்பினதன்மேல் யாராகுதல் கொத்திருத்தைக் கையேற்க அல்லது தக்கபிணை கொடுக்கத்தவறினால், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடிக்கப்படும். கொத்திருத்த ஒப்பந்தம் தீர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கைச்சாத்து வைத்ததன் மேல், ஏற்றுக்கொள்ளப்படாத மற்றக் கொத்திருத்த கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

7. ஏற்றுக்கொள்ளப்பட்ட கொத்திருத்த ஒப்பந்தக்காரன் ரூபா 100 பணப்பிணை கொடுக்கவும் ஒப்பந்தத்தைச் சேர்ந்த உறுதிக்குக் கைச்சாத்து வைக்கவும் வேண்டும். கேள்விப்பத்திரத்தின்பேரால் முற்பணமாகக் கட்டின தொகை பிணையில் ஓர் பகுதியாகக் கவனிக்கப்படும்.

8. மேற்கூறிப்போந்த பொருத்தங்கள் எல்லாவற்றிற்கும் அமையாத ஒப்பந்தக்கேள்வி ஒன்றும் அங்கீகரிக்கப்படமாட்டாது.

9. ஒப்பந்தக்கேள்விகளில் யாதேனும் ஒன்றையாவது அல்லது முழுமையையாவது ஏற்றுக்கொள்ளாதிருக்கும் உரித்தும் அவைகளில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கவர்மேந்தாருக்குண்டு.

10. இன்னும் தேவையான விபரங்களைப் பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(கைச்சாத்து) சீ. டீ. கிரிவ்வின்,
பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசருக்காக.

கொழும்பு, 1910 ம் ஆண்டு ஜுன் (ஆனி)மீ 7 ந் உ.

---

[Tender for Opium License, Gampola, Nawalapitiya, and Talawakele Sanitary Boards.]

கம்பளை, நாவலப்பிட்டி நகரசங்கத்தினதும் தலவாக்கொல்லை சுகாதார சங்கத்தினதும் அபின் குத்தகையை வேண்டுவதற்கு கேள்விப்பத்திரம் கீழே கைச்சாத்துவைப்பவரால், 1910 ம் ௵ ஜுன் (ஆனி)மீ 29 ந் திகதி புதன்கிழமை பகல் 1 மணி வரைக்கும் ஏற்கப்படும். குத்தகை 1910 ம் ௵ ஜுலாய் (ஆடி)மீ 1 ந் தேதி தொடக்கம் மாதத்திற்கு விதமாய் விற்கப்படும். கேள்விப்பத்திரத்தில் காட்டிய தொகை ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால் உடனே குத்தகை பிரசித்த லேலத்தில் விற்கப்படும்.

இன்னும் இதைப்பற்றிய விபரங்கள் "சுதேசநாட்டியம்" பத்திரிகையில் காணப்படும்.

கைச்சாத்து ஆர். பி. ஹெலிங்ஸ், கவர்மென்ற் ஏஜன்ற், சி. பி.,
கம்பளை, நாவலப்பிட்டியா, தலவாக்கொல்லை, சுகாதார சங்கத்தலைவர்.

கண்டி கச்சேரி,
1910 ம் ௵ ஜுன் (ஆனி)மீ 16 ந் உ.

---

[Supreme Court Criminal Sessions at Colombo.]

இலங்கைத்தீவிற் சங்கைபொருந்திய சுப்பிரீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது : கொழும்பு நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிரீங் கோட்டாரால் புத்தளம் சிலாபம் டிஸ்திரிக்கைச்சேர்ந்த கிரிமினல் வழக்குவிசாரணை, 1910 ம் ஆண்டு ஆடி மீ 11 ந் திகதியாகிய திங்கட்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்
எஸ். டீ. சமரசிங்க,
பிஸ்காலுக்காக.

குருநாகல் பிஸ்கால் கந்தோர்,
1910 ம் ௵ ஆனிமீ 14 ந் உ.

---

[Supreme Court Criminal Sessions at Colombo.]

இலங்கைத்தீவிற் சங்கைபொருந்திய சுப்பிரீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது : கொழும்பு நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிரீங் கோட்டாரால் மேற்குப் பிரிவைச்சேர்ந்த கிரிமினல் வழக்குவிசாரணை, 1910 ம் ஆண்டு ஜுலாய் (ஆடி)மாதம் 11 ந் தேதியாகிய திங்கட்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்,
ஈ. ஒண்டாச்சி,
டெப்பியுடி பிஸ்கால்.

கொழும்பு பிஸ்கால் கந்தோர்,
1910 ம் ௵ ஆனிமீ 13 ந் உ.

---

[Supreme Court Criminal Sessions at Jaffna.]

இலங்கைத்தீவிற் சங்கைபொருந்திய சுப்பிரீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது : யாழ்ப்பாணம் டிஸ்திரிக் நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிரீம் கோட்டாரால் யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கைச்சேர்ந்த கிரிமினல் வழக்குவிசாரணை, 1910 ம் ஆண்டு ஜுலாய் (ஆடி)மாதம் 4 ம் திகதியாகிய திங்கட்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்,
வி. தம்பிப்பிள்ளை,
பிஸ்காலுக்காக.

யாழ்ப்பாணம் பிஸ்கால் கந்தோர்,
1910 ம் ௵ ஆனி மீ 8 ந் உ.

---

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.